14.11.2024.                    R.R.L.A.O.P.No.55 of 2021

R.W. 1 மோசினா பேகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

என்னுடைய நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தியதால் அதற்கு உரிய நஷ்டயீடு கொடுக்கவேண்டும் என்று வழக்கு தொடர்ந்தேன். எனக்கு இடைக்கால உத்தரவாக அதிகப்படியான இழப்பீடு கொடுத்ததால் அதை திரும்ப பெறவேண்டி அரசு தரப்பில்இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால்அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேலாத்தூர் கிராமத்தில் ச.எண்.256/2 ல் சுமார் 45 சதுர மீட்டர் மற்றும் ச.எண்.257/1 ல் 1460 சதுர மீட்டர் என்னுடைய இடத்தை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது. ஆக மொத்தம் 1505 சதுர மீட்டர் என்னுடைய நிலத்தை அரசாங்கம் நிலஆர்ஜிதம் செய்துள்ளார்கள்.

ச.எண்.256/2 ல் 45 சதுர மீட்டர் நிலத்திற்கு இடைக்கால தீர்ப்பின்படி ரூ.89,487/- அரசாங்கம் கொடுத்தார்கள். இறுதி தீர்ப்பாணையின்படி சொத்தின் மதிப்பு ரூ.23,633.60 என நிர்ணயம் செய்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. இடைக்கால தீர்ப்பின்படி அதிகப்படியான கொடுக்கப்பட்ட தொகையான ரூ.65859 ஐ அரசாங்கத்திடம் நான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

ச.எண்.257/1 ல் 1460 சதுர மீட்டர் எடுத்தார்கள். அதற்கு இடைக்கால தீர்ப்பின்படி ரூ.26,76,416 ஐ கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தொகை அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று, இறுதி தீர்ப்பாணையில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தின்மதிப்பு

ரூ.4,01,291.10 என கணக்கீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இடைக்கால தீர்ப்பின்படி அதிகப்படியான கொடுக்கப்பட்ட தொகையான ரூ.22,75,125/-ஐ அரசாங்கத்திடம் நான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

அரசாங்க வழிகாட்டுதலின்படியும், நெடுஞ்சாலை சட்டத்தின்படி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மேற்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எனவே மேற்படி தொகையை நான் திருப்பி செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. நான் ஒரு சதுர அடிக்கு 400 என்று கோரி என்னுடைய பதிலில் கோரியுள்ளேன். என்னை இடைக்கால தீர்ப்பின்போது ஒரு டிஆர.ஒ்வும், இறுதி தீர்ப்பாணையின்போது ஒரு டிஆர்ஒ விசாரித்தார்கள் என்றாலும், நான் விசாரிக்கவில்லை என்று தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதிகப்படியான தொகையாக நான் அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.11.14 16:23:13 +0530